சுற்றுநிருபம் - **15/2009**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வட மாகாணம்
30.09.2009

வட மாகாணத்திலுள்ள சகல
கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்களுக்கும்

# கூட்டுறவு சங்கங்களுக்கான ஆட்சேர்ப்பின் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள்

கூட்டுறவுச் சங்கங்களுக்கான ஆளணியினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றி வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் 43/99ம் இலக்க 26.06.1999ம் திகதிய சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன. அத்துடன் ஆட்சேர்ப்பு விளம்பரத்தின்போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள், நேர்முகப் பரீட்சைக்குழு சேர்மான விபரங்கள் மற்றும் நேர்காணலின் போது புள்ளியிடப்பட வேண்டிய முறைகள் என்பன கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

1. வெளிவாரியான ஆட்சேர்ப்பின் போது பகிரங்க விளம்பரம் ஆகக்குறைந்தது இரு பத்திரிகைகளில் செய்யப்பட வேண்டும்.

2. தங்களுக்கு அண்மையில் உள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபைகள், ஏனைய அரச திணைக்களங்கள், தபால் அலுவலகங்கள் தங்களுடைய கிளைகள் என்பவற்றில் விளம்பரங்கள் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3. உள்வாரியான ஆட்சேர்ப்பின் போது உள்ளக சுற்றறிக்கை, அறிவித்தலிடல் என்பனவற்றின் மூலம் சகல ஊழியர்களும் இதுபற்றி அறிந்திருக்கச் செய்தல் வேண்டும்.

4. கூட்டுறவு ஊழியர் ஆட்சேர்ப்பிற்கான நேர்முகப் பரீட்சைக் குழுவில் கடமையாற்ற வேண்டிய பிரதிநிதிகள் பற்றிய விபரம் வருமாறு.

   A. பிரதேச சங்கங்கள், மாவட்ட மட்ட சங்கங்கள், மாகாண மட்ட சங்கங்கள் ஆகியவற்றில் செயலாளர்/ பொது முகாமையாளர் பதவிக்கான நேர்முக பரீட்சைக்குழுவில் ஆகக் குறைந்தது 05 பிரதிநிதிகள் கடமையாற்றுதல் வேண்டும்.

   பிரதேச சங்கங்களின் நேர்முகப் பரீட்சைக் குழுவின் பிரதிநிதிகள்

   i. குறித்த கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் (நேர்முகப் பரீட்சைக் குழுத் தலைவர்)
   ii. குறித்த மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
   iii. அப்பகுதி பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர் அல்லது அவரின் பிரதிநிதி
   iv. குறித்த மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அல்லது அவரின் பிரதிநிதி
   v. மாவட்ட கூட்டுறவு சபைச் செயலாளர் அல்லது அவரின் பிரதிநிதி அல்லது உள்ளூராட்சி பிரதேச சபையின் செயலாளர் அல்லது அவரின் பிரதிநிதி.

   மாவட்ட மட்ட சங்கங்களின் நேர்முகப் பரீட்சைக் குழுவின் பிரதிநிதிகள்

   i. குறித்த சங்கத்தின் தலைவர் (நேர்முகப் பரீட்சைக் குழுத் தலைவர்)
   ii. குறித்த மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
   iii. மாவட்ட மட்ட சங்கம் அமைந்துள்ள பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது அவரின் பிரதிநிதி.
   iv. குறித்த மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அல்லது அவரின் பிரதிநிதி
   v. மேலதிக அரசாங்க அதிபரின் பிரதிநிதி அல்லது மாவட்ட மட்ட சங்கம் அமைந்துள்ள பிரதேச சபையின் செயலாளர் அல்லது அவரின் பிரதிநிதி.

   மாகாண மட்ட சங்கங்களின் நேர்முகப் பரீட்சைக் குழுவின் பிரதிநிதிகள்

   i. குறித்த சங்கத்தின் தலைவர் (நேர்முகப் பரீட்சைக் குழுத் தலைவர்)
   ii. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அல்லது அவரின் பிரதிநிதி
   iii. மாகாண மட்ட சங்கம் அமைந்துள்ள பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது அவரின் பிரதிநிதி.
   iv. மாகாண மட்ட சங்கம் அமைந்துள்ள மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அல்லது அவரின் பிரதிநிதி
   v. மேலதிக அரசாங்க அதிபரின் பிரதிநிதி அல்லது மாகாண மட்ட சங்கம் அமைந்துள்ள பிரதேச சபையின் செயலாளர் அல்லது அவரின் பிரதிநிதி.

B. ஏனைய சகல கூட்டுறவு ஊழியர்களின் ஆட்சேர்ப்பின் போது நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கான பிரதி நிதிகளின் எண்ணிக்கை குறைந்தது 03 ஆக இருக்க வேண்டும்.

i. குறித்த சங்கத்தின் தலைவர் (நேர்முகப் பரீட்சைக் குழுத் தலைவர்)
ii. குறித்த கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அல்லது அவரின் பிரதிநிதி
iii. குறித்த சங்கத்தின் பொது முகாமையாளர்

பிரதேச, மாவட்ட மட்ட சங்கங்களுக்கு நேர்முகப் பரீட்சைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு குறித்த மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் முன் அனுமதி பெறப்படுவதோடு மாகாணமட்ட சங்கங்களுக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் அனுமதி பெறப்பட வேண்டும்.

5. கூட்டுறவு ஊழியர் நடைமுறைவிதிக் கோவை பிரிவு 1:2:3 இன் பிரகாரம் உள்வாரியாக தகைமை உடையவர்கள் இல்லாத பட்சத்தில் மட்டுமே வெளிவாரியாக பகிரங்க விளம்பரம் செய்யப்பட்டு நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட வேண்டும்.

6. குறித்த பதவிக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை உள்வாரியாக தகைமை உள்ளவர்களின் எண்ணிக்கையை விட கூடுதலாக உள்ள போது மட்டுமே வெளிவாரி, உள்வாரியான ஆட்சேர்ப்பு ஏக காலத்தில் நடைபெற உத்தேசிக்கப்பட்டு மேலுள்ள 1,2,3 ஆகியன தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

7. தகுதியான விண்ணப்பதாரிகளின் பட்டியல் நேர்முகப் பரீட்சை நடைபெறுவதற்கு குறைந்தது 03 நாட்களுக்கு முன்னர் சங்கத்தின் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும். ஆட்சேர்ப்பிற்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் நேர்முகப் பரீட்சை நடைபெற்று 05 வேலை நாட்களிற்குள் சங்க அறிவித்தல் பலகையில் இடப்படுதல் வேண்டும். இந் நடைமுறையைப் பின்பற்ற தவறுமிடத்து சங்க இயக்குனர் சபையும் பொது முகாமையாளர்/ செயலாளர் ஆகியோரும் பொறுப்பாளியாக்கப்படுவர்.

8. கூட்டுறவு பணியாளர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்று நேர்முகப்பரீட்சைக் குழுவின் விதப்புரைகளுடன் சகல ஆவணங்களும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைப்பதன் மூலம் பதவி நிர்ணய முன் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்கு ஆளணி அங்கீகாரத்திற்கு கோவைகள் அனுப்பப்படுகையில் நேர்முகப் பரீட்சைக்குழு அங்கத்தவர்கள் கையொப்பமிட்டு அவர்தம் பெயர், பதவி குறிப்பிடப்பட்ட புள்ளியிடல் படிவத்தின் (Interview Schedule) பிரதியொன்றும் கட்டாயம் அனுப்பப்பட வேண்டும். அத்துடன் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரூடாகவே கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்கு பதவி நிர்ணயத்திற்கான சகல ஆவணங்களும் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மாகாணமட்ட சங்கங்களின் ஆளணி நிர்ணய விண்ணப்பங்கள் மட்டும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஊடாக அனுப்பப்படல் வேண்டும்

9. நேர்முகப்பரீட்சையின் போது புள்ளியிடும் முறைமை பின்னிணைப்பில் காட்டப்பட்டவாறு அமைதல் வேண்டும் 43/99ம் இலக்க சுற்று நிருபத்தில் காட்டப்பட்ட புள்ளியிடும் முறைமை 30.09.2009 முதல் ரத்துச் செய்யப்படுகின்றது.

43/99 சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டபடி பதவி நியமனங்களுக்கு ஆவணங்களை சமர்ப்பிக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய மற்றைய நடைமுறைகளுடன் 01.10.2009ம் திகதிக்குப்பின் மேற்கொள்ளப்படும் சகல ஆட்சேர்ப்புக்களின்போதும் இச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள் கண்டிப்பாக கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும்.

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வட மாகாணம்

P. VAGESHAN
Secretary
Co-operative Employees Commission
Northern Province

பிரதி :

01. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும், வட மாகாணம்
02. வட மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களும்

## புள்ளியிடும் முறைமை

| இல | விடயம் | வெளிவாரி | உள்வாரி |
|---|---|---|---|
| 01 | வாய்மொழித் தேர்வு<br>கூட்டுறவு விடய அறிவு (05புள்ளிகள்)+ பொது அறிவு (05 புள்ளிகள்) | 10 | 10 |
| 02 | மேலதிக கல்வித்தகைமை<br>A/L – 05 புள்ளிகள்<br>Diploma – 10 புள்ளிகள்ளி<br>பட்டதாரி – 10 புள்ளிகள்<br>தகவல் தொழினுட்பம் (IT) – 05 புள்ளிகள் (வெளிவாரிக்கு மட்டும்) | 30 | 25 |
| 03 | மேலதிக துறைசார் கல்வித் தகைமை<br>குறித்த பதவிக்கான துறைசார் கல்வித்தகைமையல்லாது மேலதிகமாக இருகல்வித்தகைமையைக் கொண்டிருந்தால் ஒன்றுக்கு 05 புள்ளிகள் வீதம் 02x05 புள்ளிகள் | 10 | 10 |
| 04 | துறைசார் சேவைத்தகைமை<br><br>துறைசார் சேவைத்தகைமைக்கு விளம்பரத்தில் குறிப்பிட்ட பதவிக்கு தேவையான கால அளவு குறிப்பிடப்பட்டு இருந்தால் அதற்கு மேலதிகமாக கடமைசெய்யும் ஒவ்வொரு ஆண்டிற்கும் உள்ளக விண்ணப்பதாரி எனின் 01 புள்ளி வீதம் 01x10 புள்ளிகள் வெளிவாரி விண்ணப்பதாரி எனின் 01x05 புள்ளிகள் (சேவையாற்றிய நிறுவனம், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக இருத்தல் அவசியம்) | 05 | 10 |
| 05 | கூட்டுறவு செயற்பாடுகளின் மதிப்பீடு<br><br>1. சேவைச் சான்றிதழ்<br>2. சகல சம்பள ஏற்றங்களும் தடையின்றி பெறப்பட்டமை<br>3. அசாதாரண சூழ்நிலையில் சங்கத்தில் ஆற்றிய சிறப்பான சேவை. இவை ஆவணரீதியாக நிரூபிக்கப்படல் வேண்டும்.இதற்கு 03 சான்றிதழ் சமர்ப்பித்தால் 15 புள்ளிகள் வழங்கப்படலாம். (3X5 புள்ளிகள்) | - | 15 |
| 06 | நேர்முகம்<br>I தொடர்பாடல் திறன் (நேர்முகத்தில் மதிப்பிடப்படும்) - 05 புள்ளிகள்<br>II சங்க வளர்ச்சிக்கு தனது பங்களிப்பை வெளிப்படுத்தல்<br>வெளிவாரிக்கு மட்டும் - 05 புள்ளிகள் | 10 | 05 |
| 07 | சமூகசேவையில் உள்ள ஈடுபாடு (ஏனைய பொது நிறுவனங்களில் பதவியில் இருத்தல், ஒன்றுக்கு 5 புள்ளிகள் ஆகக் கூடிய புள்ளிகள் 10) | 10 | 10 |
| 08 | கடந்தகால வன்செயல்களால் கடமையில் இருந்த போது இறப்பு அல்லது நிரந்தர அங்கவீனம் ஏற்பட்ட நிரந்தர கூட்டுறவு ஊழியர்களின் நெருங்கிய குடும்ப உறவினர்களுக்கு முன்னுரிமை<br>1. இறப்பு/ நிரந்தர அங்கவீனம் ஒருவரெனில் - 10 புள்ளிகள்<br>2. 2/2ற்கு மேற்பட்டோர் எனில் - 15 புள்ளிகள்<br>பகுதி அங்கவீனம் ஒருவரெனில் - 05 புள்ளிகள்<br>2/2ற்கு மேற்பட்டோர் எனில் - 10 புள்ளிகள்<br>இறப்பும் பகுதி அங்கவீனம் 2/2ற்கு மேற்பட்டவர்கள் பாதிக்கபட்டிருப்பின் - 15 புள்ளிகள் | 15 | 15 |
| 09 | கடந்தகால வன்செயல் காரணமாக வெளிவாரி விண்ணப்பதாரியின் சொந்த சொத்தழிவு ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படின். அழிவு பெறுமதி (ரூபா.50,000.00 க்கு மேல்) | 10 | |
| | **மொத்தம்** | 100 | 100 |